**செ. கு. எண்**:240 **நாள்**:05.07.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 5.7.2012

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு கிராமம் கொளப்பள்ளி அருகில் உள்ள மழவன் சேரம்பாடி என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் செல்வன் அருண் இன்று (5.7.2012) தனது தந்தையுடன் வீட்டிலிருந்து வெளியே வந்த போது, காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த செல்வன் அருண் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சம்பவத்தில் திரு.ராஜா படுகாயம் அடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வன் அருண் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த அவரது தந்தை ராஜா அவர்களுக்கு 30,000/-ரூபாயும் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**